10.04.2026. O.S.No.76 of 2025 P.W.1 - **ஜெயசீலன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது நான் குடியாத்தத்தில் விவேக் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆன்லைன் டிரேடிங் பிசினஸ் செய்து வந்தேன் என்றால் இல்லை. என் பெயரில் இல்லாமல் வேறு யார் பெயரிலாவது அந்த தொழில் செய்தேனா என்றால் இல்லை. விவேக் மெடிக்கல்ஸ்க்கு வருமான வரி கணக்கு காண்பிக்கிறேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் என் பெயரிலும் கணக்கு காண்பிக்கிறேனா என்றால் காண்பிக்கிறேன்.

பிரதிவாதி வயது தெரியுமா என்றால் தோராயமாக தெரியும் நான் என்னுடைய வழக்குரையில் தோராயமாக 52 வயது என்று குறிப்பிட்டுள்ளேன். அவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எங்கள் வீட்டிலிருந்து இரண்டு தெருக்கள் தள்ளி வசிக்கிறார் நாங்கள் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள். அவர் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். பிரதிவாதியின் பிள்ளைகள் எனக்கு அறிமுகம் ஆனவர்களா என்றால் ஓரளவிற்கு தெரியும்.

பிரதிவாதியின் மூத்த மகன் லோகநாதன் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளார் என்றால் ஆமாம். பாபு எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு கேட்டார். இந்த வழக்கு பணம் கொடுப்பதற்கு முன்பு வேறு எந்த பணமும் பிரதிவாதிக்கு நான் கொடுத்தது இல்லையா என்றால் கொடுத்ததில்லை.

கடன் கொடுப்பதற்கு எத்ததனை நாட்களுக்கு முன்பு பிரதிவாதி பணம் கேட்டார் என்றால் தோராயமாக பத்து நாட்களுக்கு முன்பு. அவர் எதற்காக பணம் கேட்டார் என்றால் அவரின் குடும்ப செலவிற்காக கேட்டார். அவர் கேட்டதே 9 லட்சமா என்றால் ஆமாம்.

வட்டி தொழில் செய்ய லைசன்ஸ் வாங்கியுள்ளேனா என்றால் கூட்டாக வாங்கியுள்ளோம். மொத்தம் ஒன்பது பேர் அதில் பங்குதாரர்கள். அவர்கள் பெயரை சொல்ல முடியுமா என்றால் அனைவரின் பெயரையும் சொல்ல முடியாது. சாட்சி கையொப்பம் இட்டுள்ள கதிரேசன், அன்பழகன் இருவரும் அந்த பைனான்ஸில் பார்ட்னர்கள் என்றால் சரிதான். மனைவி பெயர் சங்கீதா.

பாலமுருகன் பைனான்ஸில் என் மனைவி பார்ட்னர் என்றால் பொய். நான்தான் பார்ட்னர். பாண்டு எழுதியவர் பாஸ்கர். அவரும் ஒரு பார்ட்னரா என்றால் இல்லை. முதல்முறையாக பணம் ரூபாய் 9 லட்சம் கேட்ட உடனேயே கொடுப்பதாக ஒப்புக்கொண்டேனா என்றால் முயற்சிக்கிறேன் என்று சொன்னேன். பத்து நாட்கள் கழித்து அவர் வந்த உடனேயே ரொக்கமாக பணம் கொடுத்துவிட்டேன் என்றால் ஆமாம்.

ரொக்கமாக கொடுத்ததாக சொல்லும் நான் Denomination சரியாக ஞாபகமில்லை. ரூபாய் 9 லட்சம் கொடுத்ததற்கு வருமான வரி காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பாலமுருகன் பைனான்ஸ் தவிர அபிராமி பைனான்ஸிலும் நான் பார்ட்னர். இந்த வழக்கை தவிர வேறு எத்தனை வழக்குகள் பணம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக ஞாபகமில்லை.

வேலூர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டிருந்தேன் என்றால் ஆமாம். பாலமுருகன் பைனான்ஸில் பிரதிவாதி சீட்டு கட்டியிருந்தார் என்றால் தெரியாது. பாலமுருகன் பைனான்ஸில் கார்த்திகேயன் என்பவர் ஒரு பார்ட்னர் என்றால் சரிதான். அவர் இறந்து எத்தனை நாட்கள் ஆகிறது என்றால் நாள் கணக்கு தெரியாது ஆனால் ஒன்றரை வருடங்களுக்கு மேல் ஆகும். கார்த்திகேயனின் வாரிசுகளுக்கு எதிராக பிரதிவாதியின் மகன் குடியாத்தம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டுள்ள விவரம் தெரியாது என்றால் ஆம் தெரியாது.

பணம் கொடுத்தபோது பிரதிவாதியின் குடும்பத்தாரிடம் பணம் கொடுப்பதாக சொல்லி கொடுக்கவில்லை. பிரதிவாதியிடம் நேரடியாக கொடுத்தேன். பணம் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய விவேக் மெடிக்கல்ஸில் வைத்து கொடுத்தேன். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் 20.11.2023. பணம் வாங்கியபோது பாபு தனியாகத்தான் வந்தார் என்றால் சரிதான். அவர் மட்டும் தனியாக வந்தார் சாட்சிகளை நான் அழைத்து கையொப்பம் வாங்கினேன்.

எனக்கும் பிரதிவாதிக்கும் அறிமுகமான சாட்சிகளை அழைத்து கையொப்பம் வாங்கினேன். பாபு எத்தனை கையொப்பம் போட்டார் என்றால் ஸ்டேம்புக்கு மேல் ஒன்று, ஸ்டேம்புக்கு கீழ் ஒன்று. தமிழில் கையொப்பம் போட்டாரா என்றால் ஞாபகமில்லை. சாட்சிகளில் யார் முதலில் கையொப்பம் போட்டது பின்னால் யார் போடடது என்றால் இருவர் சாட்சி கையொப்பம் போட்டார்கள் யார் முதலில் போட்டது யார்

பின்னால் போட்டது என்று நினைவில்லை. சாட்சிகள் கூட ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டார்களா அல்லது தமிழில் போட்டார்களா என்றால் நினைவில்லை.

பாண்டை எடுத்துக்கொண்டு பிரதிவாதி பாஸ்கர் என்பவரை எழுதுவதற்காக அழைத்து வந்தார். பிரிண்டட் பார்ம் என்றால் ஆமாம். பூர்த்தி செய்யப்படாத இடத்தில் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டது. குமார் என்பவர் கார்த்திகேயனின் மைத்துனர் என்றால் சரிதான். அவர் பிரதிவாதியின் மீது குடியாத்தம் கோர்டில் வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. பிரதிவாதியின் வயது தவறாக போட்டுள்ளேன் என்றும் அதனால் இந்த வழக்கு ஏற்புடையது இல்லை என்றால் அவரின் வயது தெரியாது அதனால் தோராயமாக போட்டுள்ளேன். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது ஆனால் அவரின் மகன் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளார்.

நான் பாபுவிற்குத்தான் பணம் கொடுத்தேன் அவரின் மகனுக்கு அல்ல. பிரதிவாதி அவரின் மகன்களை வைத்து சுகஜீவனம் செய்து வருகிறார் என்றும் அதனால் ரூபாய் 9 லட்சம் கடனாக வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. முதல் முறையாக கடன் கொடுக்கும் நபருக்கு ஒரே அடியாக ரூபாய் 9 லட்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சாட்சி கையொப்பம் போட்டுள்ள கதிரேசன் மற்றும் அன்பழகன் ஆகியோரிடம் பிரதிவாதி ஏற்கனவே பணம் வாங்கி திரும்ப கொடுத்துள்ளார். நான் அவர்களிடம் கேட்டேன் நல்ல பார்ட்டி கொடுக்கலாம் என்று சொன்னார் அதனால் கொடுத்தேன்.

மேற்கண்ட சங்கதியை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதிக்கு 72 வயது ஆகிறது என்றும் அவர் தொழில் செய்து 32 ஆண்டுகள் ஆகிறது என்றும் அதனால் அவர் பணம் வாங்க தேவையில்லை என்றால் சரியல்ல. நான் நடத்தும் பைனான்ஸில் சீட்டு எடுத்தபோது வாங்கிய கையொப்பத்தை வைத்து வழக்கு போட்டுள்ளேன் என்றும் ஆனால் பாண்டில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றால் அவருடைய கையொப்பம்தான். பைனான்ஸில் வர வேண்டிய பணத்திற்கெல்லாம் தனிப்பட்ட முறையில் வழக்கு போடுவது வாடிக்கையாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

கொடுக்காத பணத்திற்கு பாண்டு தயார் செய்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நான் கொடுத்த அறிவிப்பிற்க்கு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. கார்த்திகேயன் மனைவி திலகா வேண்டப்பட்டவர் என்பதால் பழி வாங்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.10 17:07:42 +0530